புதுக்கோட்டை, வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு வி.எம்.ரவிச்சந்திரன், எம்,எஸ்ஸி(விவ).,

செமுஆ.அ4/13454/2023 நாள் 11.6.2024

நாள் 20/6/24

பொருள் பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் – தொகுதி IV–ன் கீழ் 24.7.2022 அன்று நடத்தப்பட்ட தேர்வு ( அறிவிக்கை எண்.07/2022, நாள் 30.3.2022) – இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) ஆக பணி நியமனம் வழங்கி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது – பணியிட நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை–3 க.எண்.1919/PSD–D2/2023,நாள் 02.9.2023
2. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செமுஆ.அநிபி5/92705/2023, நாள் 8.12.2023
3. இவ்வலுவலக செமுஆ.அ4/13454/2023, நாள் 12.12.2023
4. கரூர், முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் க.எண்.1519/ஆ5/2024, நாள் 05.6.2024

.. .. ..

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 24.7.2022 அன்று நடத்தப்பட்ட (அறிவிக்கை எண்.07/2022, நாள் 30.3.2022) இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கான போட்டித்தேர்வு வாயிலாக பார்வை 1–ல் கண்டுள்ள ஆணையின்படி இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) ஆகத் தேர்வு செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட தெரிவாளர்களுக்கு பார்வை 2–ல் கண்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் தற்காலிக அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் ரூ.19500–71900 (Level–08) என்ற ஊதிய விகிதத்தில் பணி நியமனம் வழங்கி புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பார்வை 3–ல் கண்டுள்ள ஆணையின்படி கீழ்கண்டவாறு பணியிட நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

| வ. எண் | தநாஅப தேர்வா–ணைய வ.எண் | பதிவு எண் | பெயர் மற்றும் பதவி | அரசுப்பணியில் சேர்ந்த நாள் | பணிபுரிந்து வரும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 01. | 02 | 0901010142 | திருமதி சி.அம்சா இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) | 18.12.2023 முற்பகல் | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பொன்னமராவதி |
| 02. | 66 | 0902002189 | திரு வி.ஜெயப்பிரகாஷ் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) | 15.12.2023 முற்பகல் | வேளாண்மை உதவி இயக்குநர், அன்னவாசல் |

மேற்கண்ட பணியாளர்கள் தமிழ்வழி கல்வியில் பயின்றுள்ளதால் (Person Studied in Tamil Medium) இதற்கான சான்றிதழ்கள் மீதான மெய்த்தன்மை சான்று தற்போது பார்வை 4-ல் கண்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பார்வை 2-ல் கண்டுள்ள ஆணையில் வழங்கிய அறிவுரைகளின்படி மேற்கண்ட அட்டவணையின் கலம் எண்.5-ல் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கண்ட இரு பணியாளர்களும் அரசுப்பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை மாண்பமை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை அமர்வில் இது தொடர்பாக நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் மீது பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும். (The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Honourable High Court of Madras/Madurai Bench of the Honourable High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV (Group IV).

மேற்கண்ட பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடித்திட வேண்டும். பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவுசெய்து அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணை வழங்கப்பட்ட பின்னரே 2-வது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளை பெறத் தகுதியுடையவர்கள் என ஆணையிடப்படுகிறது.

ஒம்/-வி.எம்.ரவிச்சந்திரன்,
வேளாண்மை இணை இயக்குநர் (பொ)
புதுக்கோட்டை

பெறுநர்
மேற்கண்ட பணியாளர்கள்
வேளாண்மை உதவி இயக்குநர், பொன்னமராவதி/அன்னவாசல் மூலமாக

நகல் வேளாண்மை உதவி இயக்குநர், பொன்னமராவதி/அன்னவாசல்
நகல் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
(அறிபி.5 பிரிவு)

//உத்தரவின்படி//

11.06.2024
கண்காணிப்பாளர்
11.6.2024

ஐயா,

நகல் பெற்றுக் கொண்டேன்.

25.6.2024